# January 11, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. கடல் ஆமைகளின் பயண வழித்தடங்களை கண்காணிக்க ஏதுவாக, கடற்கரைக்கு முட்டையிட வரும் ஆலிவ் ரிட்லி வகை கடல் ஆமைகள் மீது செயற்கைக்கோள் ட்ராக்கர் பொருத்தும் பணியை வனத் துறை தொடங்கியுள்ளது.

(i) ஆண்டுதோறும் டிசம்பர் முதல் ஏப்ரல் வரை சென்னை தொடங்கி கன்னியாகுமரிவரை உள்ள தமிழக கடலோரப் ‘ஆலிவ் ரிட்லி' வகை கடல் ஆமை. பகுதிகளில் ஆலிவ் ரிட்லி வகை கடல் ஆமைகள் முட்டையிடுவது வழக்கம். இதில், கடல் ஆமைகளின் கடல் வழி பயணம், இடமாற்றங்கள் குறித்து ஆய்வு செய்ய கடல் ஆமைகளின் மீது செயற்கைக்கோள் ட்ராக்கர் பொருத்த தமிழக அரசு திட்டமிட்டது.

2. அமெரிக்காவுடன் தங்கள் பிராந்தியத்தை இணைக்க அந்த நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப் மீண்டும் வலியுறுத்தியதற்கு கிரீன்லாந்து அரசியல் கட்சித் தலைவர்கள், கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். தங்கள் தீவின் எதிர் காலத்தை தாங்களே தீர்மானிக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

(i) டென்மார்க்குக்கு சொந்தமான, உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்து, தன்னாட்சிப் பிரதேசமாக செயல்பட்டுவருகிறது. டென்மார்க்கில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா, அல்லது சுதந்திரம் பெறுவதா என்பது குறித்து கிரீன்லாந்தில் விவாதங்கள் நடை பெற்றுவருகின்றன.

(ii) யுரேனியம், இரும்பு, தங்கம், அரிய தாதுக்கள் உள்ளிட்ட ஏராளமான கனிம வளங்களைக் கொண்ட அந்தத் தீவின் அமைவிடம் ராணுவ முக்கியத்துவம் பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

3. தொழிலதிபர் எலான் மஸ்கின் எக்ஸ்ஏஐ நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு உரையாடல் தளமான க்ரோக் இணையதளத்துக்கும், அதன் செயலிக்கும் இந்தோனேசியாவில் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(i) பெண்களின் படங்களை ஆபாசமாக மாற்றிக் காட்டுவது போன்ற க்ரோக்கின் உள்ளடக்கங்கள் இந்தோனேசியாவின் சட்டங்கள் மற்றும் கலாசார மாண்புகளுக்கும் எதிராகவும் மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலும் உள்ளதால் இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

(ii) வெள்ளிக்கிழமை (ஜன. 9) முதல் அமலுக்கு வந்துள்ள இந்தத் தடையை அனைத்து இணைய சேவை நிறுவனங்களும் செயல்படுத்த வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

4. கேலோ இந்தியா கடற்கரை விளையாட்டுப் போட்டிகளின் (பீச் கேம்ஸ்) கடைசி நாளான சனிக்கிழமை, செபக்தக்ரா விளையாட்டில் தமிழ்நாடு அணி தங்கம் வென்று அசத்தியது.

(i) அத்துடன் இந்த ஆண்டு கேலோ இந்தியா பீச் கேம்ஸில் மொத்தமாக 3 தங்கம், 2 வெள்ளி, 3 வெண்கலம் என 8 பதக்கங்களுடன், தமிழ்நாடு அணி 2-ஆம் இடம் பிடித்தது.

(ii) 2-ஆம் ஆண்டு கேலோ இந்தியா பீச் கேம்ஸ், தாத் ரா-நாகர் ஹவேலி, டாமன்-டையுயூனியன் பிரதேசத்தில் கடந்த 5-ஆம் தேதி தொடங்கி 6 நாள்கள்

நடைபெற்றது. பீச் வாலிபால், பீச் கால்பந்து, பீச் கபடி, பென்சாக்சிலாட், செபக்தக்ரா, திறந்த நீர்நிலை நீச்சல் ஆகிய 6 பதக்க விளையாட்டுகள் இதில் அரங்கேறின.

5. அல்மாண்ட்' குழந்தைகள் மருந்தைப் பயன்படுத்த உடனடியாகத் தடை விதித்து தெலங்கானா மருந்துகள் கட்டுப்பாட்டு நிர்வாகம் உத்தரவு பிறப்பித்தது.

(i) காய்ச்சல், ஆஸ்துமா என குழந்தைகளைப் பாதிக்கும் நோய்களுக்கு பரிந்துரைக்கப்படும் அல்மாண்ட் மருந்தில் அதிக நச்சுத்தன்மை கொண்ட எத்திலீன் கிளைகால் இருப்பதாக மத்திய மருந்துகள் தர நிர்ணய கட்டுப்பாட்டு அமைப்பு எச்சரித்ததையடுத்து இந்த உத்தரவு வெளியிடப்பட்டது.

6. தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் (என்எஸ்ஏ) - அஜீத் தோவல்

7. தேசிய இளைஞர் தினத்தையொட்டி, தில்லியில் 3,000-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் பங்கேற்கும் 'வளர்ந்த பாரதம் இளம் தலைவர்கள் மாநாடு திங்கள்கிழமை (ஜன. 12) நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் மோடி பங்கேற்று, இளைஞர்களுடன் கலந்துரையாடவுள்ளார்.

(i) சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினமான ஜன. 12-ஆம் தேதி தேசிய இளைஞர் தினமாக கொண்டாடப்படுகிறது. நடப்பாண்டு இந்த தினத்தையொட்டி, தில்லி பாரத மண்டபத்தில் 'வளர்ந்த பாரதம் இளம் தலைவர்கள் மாநாடு நடைபெறவிருக்கிறது. நாடு முழுவதும் இருந்து பங்கேற்கும் 3,000-க்கும் மேற்பட்ட இளைஞர்களுடன் பிரதமர் மோடி கலந்துரையாடவுள்ளார்.

8. அதிசக்திவாய்ந்த சூரியப் புயலால் புவி காந்தப்புலத்தில் ஏற்படும் தாக்கம் குறித்து ஆதித்யா எல்-1 விண்கலம் புதிய தரவுகளை அளித்துள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தெரிவித்தது.

(i) 2024-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் சூரியப் புயல் பூமியை தாக்கியது. இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் மேற்கொண்ட ஆய்வு குறித்து கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் வானியற்பியல் இதழில் வெளியானது.

(ii) இந்தியாவின் முதல் சூரிய விண்கலமான ஆதித்யா எல்-1 விண்கலத்தின் கண்டுபிடிப்புகள் மற்றும் சர்வதேச விண்வெளி மையங்களின் தரவுகளைக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது

(iii) இதுதொடர்பாக இஸ்ரோ வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'சூரியனில் ஏற்படும் தற்காலிக மாற்றங்கள் விண்வெளி வானிலை எனப்படுகிறது. சூரிய வளிமண்டலத்தில் இருந்து வெளிவரும் சக்திவாய்ந்த அனல்வீச்சு செயற்கைக்கோள்கள், தொலைத்தொடர்பு மற்றும் வழித்தட சேவைகள், எரிசக்தி உள்கட்டமைப்புகளை கடுமையாகப் பாதிக்கிறது.

(iv) சூரியப் புயலின் கொந்தளிப்பான பகுதி புவியின் காந்தப்புலத்தை கடுமையாக சுருக்கி, அதை புவிக்கு அருகில் தள்ளுகிறது. இதனால் புவிசார் சுற்றுப்பாதையில் நிலைகொண்டுள்ள செயற்கைக்கோள்கள் கடும் விண்வெளி வானிலைகளால் பாதிப்புகளை எதிர்கொள்கின்றன.

(v) சூரியப் புயலால் உயர் அட்சரேகைப் பகுதிகளில் நீரோட்டங்கள் மிகவும் தீவிரமடைகிறது. இதன் காரணமாக வளிமண்டலத்தின் மேல் பகுதி வெப்பமாகி புவி வாயுக்கள் வெளியேறும் சூழல் ஏற்படுகிறது. விண்வெளி சொத்துகளை பாதுகாக்க விண்வெளி வானிலை மற்றும் சூரியனின் செயல்பாடுகளை மிக கவனமாக கண்காணிக்க வேண்டியதன் அவசியத்தை இந்த ஆய்வு மீண்டும் உறுதிபடுத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

9. இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுவதில் நிலுவையில் உள்ள பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வுகாண இருதரப்பும் முடிவு செய்துள்ளன.

(i) இது தொடர்பாக இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் ஐரோப்பிய ஒன்றியத்தில் வர்த்தகம் மற்றும் பொருளாதார பாதுகாப்பு ஆணையர் மாரோஸ் செஃப்கோவிக் ஆகியோர் பேச்சு வார்த்தைக் குழுக்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக மத்திய அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ii) பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஸ்பெயின், பெல்ஜியம் உள்பட 27 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய ஒன்றியத்தில் தலைமையகமான பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸல்ஸில் மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் கடந்த ஜன. 8, 9 ஆகிய இரண்டு நான்கள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார்.

(iii) அப்போது, தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வர்த்தகம் மற்றும் பொருளாதார பாதுகாப்பு ஆணையர் மாரோஸ் செஃய்கோ விக்குடன் அவர் உயர்நிலைப்பேச் சுவார்த்தையில் ஈடுபட்டார்.

(iv) தடையற்ற வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து இருவரும் மறுஆய்வு செய்தவர்.

(v) பின்னர் சமூக ஊடகத்தில் பியூஷ் கோயல் வெளியிட்ட பதிவில், விவசாயிகள் மற்றும் குறு- சிறு-நடுத்தா தொழில் துறையின்ரின் நலன்களைக் காக்கும் வகைவிலான நவீன பொருளாதார கூட்டாண்மை மற்றும் விதிகள் அடிப்படையிலான வர்த்தக கட்டமைப்புக்கு உறுதியேற்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இந்தியா-ஐரோப்பிய ஒன்றியம் இடையே விரிவான தடை யற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்கு இதுவரை 16 சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன.

(vi) இருதரப்பு கோரிக்கைகள்: இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஜவுளி, தோல் பொருள்கள் உள்ளிட்ட தொழிலாளர்களை மையப்படுத்திய துறைசார் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்பது இந்தியாவில் கோரிக்கையாக உள்ளது. அதேநேரம், வாகன உற்பத்தி, மருத்துவ உபகரணங்கள், ஒயின், ஆல்கஹால், இறைச்சி உள்ளிட்ட பொருள்களுக்கு இந்தியா வரியைக் குறைக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் கோருகிறது. இந்தியாவின் ஏற்றுமதியில் 17 சதவீதம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குச் செல்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தைப் பொறுத்தவரை, இந்தியாவுக்கு மேற்கொள்ளப்படும் ஏற்றுமதி 9 சதவீதமாகும்.

(vii) கடந்த 2024-25-இல் இருதரப்பு வர்த்தக மதிப்பு 136.53 பில்லியன் டாலர் (ஏற்றுமதி

75.85 பில்லியன் டாலர், இறக்குமதி 60.68 பில்லி யன்டாலர்.

(viii) ஏற்றுமதி என்னென்ன? ஆயத்த ஆடைகள், மருந்துகள், உருக்கு பெட்ரோலியப் பொருள்கள், மின்சார இயந்திரங்கள் உளிட்டவை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கான இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி பொருள்களாகும்.

(ix) கடந்த ஆண்டில் பிரிட்டன், ஓமன் ஆகிய நாடுகளுடன் இந்தியா தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது. கடந்த 2022-இல் ஆஸ்திரேலியா, 2021-இல் மோரீஷஸுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

10. சிக்கிமில் தொலைதூர பகுதிகளில் வாழும் முன்னாள் படையினருக்கு அத்தியாவசிய மருந்துகளை அவர்களின் வீடுகளுக்கே சென்று விநியோகிக்கும் புதிய திட்டத்தை ராணுவத்தின் திரிசக்தி படைப் பிரிவு சோதனை அடிப்படையில் தொடங்கியது.

(i) நாட்டில் வியூக முக்கியத்துவம் வாய்ந்த சிக்கிம் மாநிலம் மற்றும் கிழக்கு இமயமலையில் சிலிகுரி வழித்தட பகுதியின் பாதுகாப்புக்கு பொறுப்பான ‘திரிசக்தி' படைப் பிரிவு, இந்திய அஞ்சல் துறை மற்றும் இந்திய மின்னணு நிர்வாக சேவைகள் நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து இந்தப் புதிய திட்டத்தைச் செயல்படுத்துகிறது.

(ii) முதல்கட்டமாக,சிக்கிமின்தெற்கு, வடக்கு, மேற்கு பகுதிகளில் தொலை தூர இடங்களில் வசிக்கும் 58 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தங்களுக்கான அத்தியாவசிய மருந்துகளைப் பெற கடினமான பாதைகள் வழியாக அதிக தொலைவுக்கு பயணிக்க வேண்டியுள்ளதால், இவர்கள் கடும் சிரமத்தை எதிர் கொண்டு வந்தனர். இனி இவர்களின் வீடுகளுக்கே சென்று மருந்துகள் விநியோகிக்கப்படும் என்று திரிசக்தி படைப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) வயது மூத்த மற்றும் பணியின் போது உடல் உறுப்புகளை இழந்த முன்னாள் படையினருக்குமருத்துவ வசதியை உறுதி செய்வதுடன் அவர்களின் பயண சிரமத்தைக் குறைப்பதே புதிய திட்டத்தின் நோக்கமாகும். நாடு தழுவிய முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, இந்த சோதனைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது என்று செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11. அமெரிக்காவுடன் இணைந்து பயங்கரவாத எதிர்ப்பு கூட்டு ராணுவப் பயிற்சியை பாகிஸ்தான் தொடங்கியுள்ளது.

(i) பாகிஸ்தான் கரியன் மாவட்டம் பாபியில் உள்ள தேசிய பயங்கரவாத எதிர்ப்பு மையத்தில் இந்தக் கூட்டு ராணுவப் பயிற்சியை இரு நாடுகளும் மேற்கொள்கின்றன.

(ii) இதுகுறித்து பாகிஸ்தான் உள் துறை வெளியிட்ட செய்திக்கு றிப்பில் கூறியிருப்தாவது: அமெரிக்கா உடனான 13-ஆவது 'இன்ஸ்பயர்ட் காம்பிட் 2026 கூட்டு ராணுவப் பயிற்சி தொடங்கியது. இரண்டு வாரம் நடைபெறும் இந்தப் பயிற்சியில், பயங்கரவாத எதிர்ப்பு ராணுவ நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி மேற்கொள்ளப்படும்.

(iii) தரைப் பரப்பிலிருந்து வான் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனையை வடக்கு அரபிக் கடல் பகுதியில் பாகிஸ்தான் கடற் படை மேற்கொண்டது. இதுகுறித்து பாகிஸ்தான் ராணுவம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'தரைப் பரப்பில் வான் இலக்குகளைத் தாக்கி அழிக்கும் மேம்படுத்தப்பட்ட 'எல்.ஒய்-80' ஏவுகணை சோதனை வெற்றியானது.